இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நான் கிளர்ந்தெழவில்லை; விலகிச் செல்லவுமில்லை. அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் என் முகத்தை மறைக்கவில்லை. ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கின்றார்; நான் அவமானம் அடையேன்; என் முகத்தைக் கற்பாறை ஆக்கிக்கொண்டேன்; இழிநிலையை நான் அடையமாட்டேன் என்று அறிவேன் (எசா 50:6-7)

# உலகெங்கும் பெண்களுக்கு சம மாண்பும், மரியாதையும் கிடைக்கப்பெற வேண்டும்!

## திருத்தந்தை வலியுறுத்து



# இறைவனுக்கான 24 மணிநேரம் இறைவேண்டல் வழிபாடு இதயங்களை கடவுளிடம் நெருக்கமாக்கியது



# இரக்கம் மற்றும் அமைதியின் பாதையில் திருத்தந்தையின் 11 ஆண்டுகள்!

.திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அருகிலும் தொலைவிலும் இருப்பவர்களின் தவறான புரிதலையும் எதிர்த்துநின்று, வாழ்வின் புனிதத்தை மையமாக வைத்து, பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுடன் நெருக்கமுடன் இருப்பதையும், வெளிவேடத்தில் போர்களின் சாரங்களை இழுக்கும் அழுக்குப் பொருளாதாரத்தின் விருப்பங்களைக் கண்டிப்பதையும் தொடர்கிறார் என்று கூறியுள்ளார் திருப்பீடத் தகவல்தொடர்பு அவையின் செய்திப் பிரிவு இயக்குனர், முனைவர் அந்த்ரேயா தொர்னியெல்லி.

மார்ச் 13, இப்புதனன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உரோமைப் பேராயராகப் பொறுப்பேற்று 12-ஆம் ஆண்டைத் தொடங்கும் வேளை, இவ்வாறு பெருமிதத்துடன் கூறியுள்ள முனைவர் தொர்னியெல்லி அவர்கள், போரின் தவிர்க்க முடியாத தன்மைக்கு



கடந்த மார்ச் 13 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் தனது 11-ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடினார்

சரணடைவது போல் தோன்றும், அவைகளின் முடிவுகளின் விளைவுகளை மதிப்பிட முடியாத ஆட்சியாளர்களின் தயவில் சிக்கித்தவிக்கும் மனிதகுலத்தின் ஓர் இருண்ட வேளையில் தனது 12-ஆம் ஆண்டைத் தொடங்குகிறார் திருத்தந்தை என்றும் உரைத்துள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கடந்த பதினோரு ஆண்டுகால வரலாற்றை மீள்பார்வை செய்து பார்த்தால், பேதுருவின் வழித்தோன்றலான திருத் தந்தையின் குரலில் இறைவாக்குரைத்தலின் மதிப்பை ஒருவர் உணர முடியும் என்றும் எடுத்துக் காட்டியுள்ளார் முனைவர் தொர்னியெல்லி.

2015-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'இறைவா உமக்கே புகழ்' (*Laudato si'*), 2020- ஆண்டு வெளியிடப்பட்ட 'அனைவரும் உடன்பிறந்தோரே' (*Fratelli tutti*) ஆகிய திருத்தந்தையின் இரண்டு திருமடல்களை சுட்டிக்காட்டி, உடன் பிறந்த உறவு, காலநிலை மாற்றம், இடம்பெயர்வு, போர்கள், பொருளாதாரம் ஆகியவற்றின் மீதான அவரது அக்கறையையும் பொறுப்புணர்வையும் எடுத்துக்காட்டியுள்ளார் முனைவர் தொர்னியெல்லி.

வரவேற்பின், நெருக்கத்தின், மென்மையின், உடனிருப்பின் தோற்றத்தில், அரவணைத்துச் செவிமடுக்கக்கூடிய ஒரு கிறிஸ்தவ சமூகத்தின் தோற்றத்தில், ஆயிரம் வரம்புகளுக்கு மத்தியிலும், ஒருவர் அனுபவித்த மற்றும் அனுபவிக்கத் தேடும் பரிவிரக்கத்தினை மீட்டெடுப்பதற்கான எதிர்முழக்கம் திருத்தந்தையிடத்தில் இருக்கிறது என்றும் கூறியுள்ளார் முனைவர் தொர்னியெல்லி.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - **வத்திக்கான்**

## மலேசியாவில் திருமுழுக்குப் பெறும் 1,700 புதுநிலைக் கிறிஸ்தவர்கள்

மலேசியாவின் தலத்திருஅவைச் சமூகம் 1,700-க்கும் மேற்பட்ட புகுநிலைக் கிறிஸ்தவர்களுக்குத் திருமுழுக்கு வழங்கத் தயாராகி வருவதாக Fides செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

அண்மைய ஆண்டுகளில், மலேசியாவில் உள்ள கத்தோலிக்கச் சமூகத்தில் திருமுழுக்குக் கோரும் வயதுவந்தோரின் (*Adults*) எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்றும், பல்வேறு பங்குத்தளங்களிலிருந்து வரும் திருமுழுக்குப் பெற விரும்பும் வயதுவந்தோரின் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் 'முதியோருக்கான கிறிஸ்தவ புகுமுகச் சடங்கு' என்ற புதியதொரு பாதையை பல்வேறு மறைமாவட்டங்கள் திறந்து வைத்துள்ளன என்றும் அச்செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# "பாடுகளின் குருத்து ஞாயிறு" தன்னை இழக்கத் தூண்டும் தலைமைத்துவம்!

குருத்து ஞாயிறு என்று நாம் இன்று ஒன்றுகூடி கொண்டாடும் ஞாயிறு ஆண்டு முழுவதும் வந்துபோகும் இதர ஞாயிறுகளைவிட மேலானது என்றால் மிகையாகது. வழக்கமாக குருத்து ஞாயிறு என்றால் இயேசுவின் பாடுகளைப் பற்றியே நாம் சிந்திப்பதுண்டு. தவக்காலத்தின் உச்சநிலைக் காட்சிகள் இவ்வாரத்தில் அரங்கேறவிருக்கின்றன என்று நினைத்து புனித வாரத்திற்குள் காலடி எடுத்து வைப்போம். நமக்கு இதில் எந்த கருத்துவேறுபாடும் கிடையாது. இயேசு தம் பாடுகளையும் சிலுவை மரணத்தையும் ஏற்க எருசலைமுக்குள் கழுதைமீதேறி சென்றதும் அவர் சிறப்பாக வரவேற்கப் பட்டதும் ஒரு வரலாற்று நிகழ்வு. இதை மறுப்பதற்கில்லை.

இயேசுவின் பாடுகளும் சிலுவை மரணமும் ஒருபுறம் இருக்க, இன்றைய நாளிலே, பிறருக்காக தன்னையே கையளிக்கத் துணிந்த இயேசுவின் தலைமைத்துவத்தைப் பற்றி சிந்திப்பதும் தியானிப்பதும் நமக்கு இன்றியமையாததாகும்.

முதலாவதாக, அக்காலம் தொட்டு இக்காலம் வரை "பணத்தை நேசிக்கும் தலைவர்கள் அல்ல, அன்பில் நீதியை வெளிப்படுத்தும் தலைவர்களே சமூகத்திற்குத் தேவைப்படுகிறார்கள். தன்னை நாடறிய வேண்டும் என்று விளம்பரத்திற்கு பொதுப்பணியில் ஈடுபடும் ஏமாற்றுப் பேர்வழிகள் மலிந்துவிட்டனர். அன்பில் மனிதநேயத்தை வெளிப்படுத்தும் தலைவர்களை வலைபோட்டுத் தேட வேண்டியுள்ளது. சுயநலப் போர்வையில் பொதுநலம் நாடும் இன்றைய பல தலைவர்கள் கிறிஸ்தவத்திலும் உளர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஆபிரகாம் லிங்கனுக்குப் பிறகு அடிமைகளாக இருந்த ஆப்பிரிக்க அமெரிக்க இனத்தவரின் விடிவெள்ளியாக, நம்பிக்கை நாயகனாகத் திகழ்ந்தவர் மார்ட்டின் லூதர் கிங் (ஜுனியர்). அவரிடமிருந்து வெளிப் பட்டவையெல்லாம் வெறும் வார்த்தைகள் அல்ல. மாறாக, அடிமையினத்தை வேரோடுப் பிடுங்கி எறிய வீசப்பட்ட ஏவுகணைகள். இயேசுவைப் போன்றதொரு நல்ல தலைமைத்துவத்தை அவர் வெளிப்படுத்தியதோடு அதற்காகவே வாழ்வை அர்ப்பணித்தார். 'எனக்கொரு கனவுண்டு' (*I have a dream*) என்பது அவரது கோட்பாடக இருந்தது.

இன்று அத்தகைய தலைமைத்துவத்தை இழந்த ஆன்மாவாக திருஅவை உள்ளது என்றால் மிகையாகாது. இறையாட்சிதான் திருஅவையின் தனிபெரும் இலக்கு என்பது உண்மையென்றால், நமது தலைமைத்துவதில் இயேசு கொண்ட தலைமைத்துவம் ஒன்றிக்க வேண்டும். 'நான் தலைவன்' என்ற அகந்தையும், நான் நினைப்பதை சாதிப்பேன்' என்ற சுயநலமும் கொடி கட்டிப பறக்கும் போது, கிறிஸ்துவின் தலைமைத்துவம் விலை போகாது. இயேசுவின் தலைமைத்துவம் கனி தரும் தலைமைத்துவம். கனிதர வேண்டிய ஒரு மரம் இலையும் தழையுமாக பசுமையாகவும் செழிப்பாகவும் காட்சியளித்தால் மட்டும் போதாது. அது கனிகளைத் தர வேண்டும். அவ்வாறே, கிறிஸ்தவ தலைவர்கள் பேருக்கும் புகழுக்கும் தலைமைத் துவத்தை விரும்பி ஏற்பது தில்லுமுல்லுக்குச் சமமாகும்.

நல்ல கிறிஸ்தவத் தலைமைத்துவத்திற்கு இரு பண்புகள் இன்றியமையாதவை. 1. **கடவுளோடு நடப்பது 2. கடவுளுக்கும் அவர்தம் மக்களுக்கும் சேவை செய்வது.**

புனித பவுல் அடிகள் பொதுப் பணி குறித்து கூறும் போது, 'மனிதர்களுக்கு உகந்தவர்களாகுமாறு, வேலை செய்வதாகக் காட்டிக் கொள்பவர்களாயிராமல் கிறிஸ்துவின் பணியாளராய்க் கடவுளின் திருவுளத்தை உளமார நிறைவேற்றுங்கள்' (எபே 6:6) என்று கிறிஸ்தவத் தலைமைத்துவத்திற்கு வழிகாட்டுகிறார்.

மேலும், கிறிஸ்தவ தலைமைத்துவதில் வெளிப்படைத்தன்மையின் அவசியம் உணரப் பட வேண்டும். இயேசு அவரிடம், "நரிகளுக்குப் பதுங்குக் குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு. மானிட மகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை" (மத்தேயு 8:20) என்று வெளிப்படையாக தன் நிலையை ஒப்புகொண்டார். இயேசு இன்று வெளிப் படுத்தும் தலைமைத்துவத்தில் எளிமை இருந்தது, மக்கள் ஆதரவு இருந்தது. ஆகவே, கிறிஸ்தவ தலைமைத்துவத்தில் 'பதவி வெறி' இருப்பது அன்றைய 'பொற்கன்று' வழிபாட்டிற்குச் சமம் என்பதை நினைவில் கொள்வோம்.

*-ஆர்.கே.*

# கிறிஸ்துவுக்குத் துன்புறும் ஊழியராவோம்!

பாடுகளின் குருத்து ஞாயிறான இன்று நாம் படிக்கக் கேட்கும் வாசகங்கள், 'நமக்காக இயேசு பட்ட பாடுகளை எடுத்துக்கூறுகின்றன.

இறைவாக்கினர் எசாயா நூலில் எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகம் துன்புறும் ஊழியன் படுகின்ற பாடுகளை நமக்கு எடுத்துக்கூறுகின்றது. இங்கே சொல்லப்படும் துன்புறும் ஊழியன் என்பவர் 'ஆண்டவரின்மீது நம்பிக்கை கொண்ட மக்களினமாக' இருக்கலாம் (எசா 49:1-5) அல்லது இறைவாக்கினர் எசாயாவோ அல்லது அவரைப் போன்று துன்பங்களை அனுபவித்த இறைவாக்கினர் எரேமியாவாகவோ இருக்கலாம் என்று சொல்வர். ஆனால், இவர்கள் எல்லாரையும் விட இயேசுவோடுதான் மேலே சொல்லப்பட்ட வார்த்தைகள் மிகவும் பொருந்துவதாக இருக்கின்றன.

இயேசு நமக்காகப் பட்ட பாடுகள், அடைந்த அவமானங்கள், இழந்த இழப்புகள் எல்லாம் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றையெல்லாம் நாம் வார்த்தையால் விளக்கிச் சொல்ல முடியாது. பிலிப்பியருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் "கடவுள்

ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்". என்று விவரிக்கிறது.




முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினர் 'ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கின்றார்; நான் அவமானம் அடையேன்" என்று கூறுகின்றார். நற்செய்தியின் பொருட்டும் பிறர் நம்மைத் துன்புறுத்தலாம், வசைபாடலாம், இழிவாக நடத்தலாம். அத்தகைய தருணங்களில்

கொள்ளவேண்டிய செய்தியாக இருக்கின்றது.

நற்செய்தியின் பொருட்டும், இயேசுவின் பொருட்டும் நாம் அடையும் துன்பங்களுக்கு இறைவன் தக்க கைம்மாறு தருவார் என்பதாகும். இரண்டாம் வாசகத்தில் 'தம்மை வெறுமையாக்கி, அடிமையின் கோலம் பூண்டு, சிலுவை சாவை ஏற்றுக்கொண்ட கிறிஸ்துவை ஆண்டவராகிய கடவுள் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார் என்று நாம் வாசிக்கின்றோம். ஆம், ஆண்டவருடைய பணியைச் செய்வோருக்கு ஆண்டவர் தக்க கைமாறு தருவார் என்பதில் எந்தவொரு ஐயப்பாடும் கிடையாது என்பதுதான் உண்மை. மத்தேயு நற்செய்தி 5:11 ல் நாம் அதைத்தான் வாசிக்கின்றோம், "என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை, பொல்லாதவை எல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்கள்! மகிழ்ந்து பேரு வகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும்

### குருத்து ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசா 50: 4-7 |
| திரு.பாடல் | 22:7-8.16-17a.18-19.22-23 |
| 2-ம் வாசகம் | பிலி 2: 6-11 |
| நற்செய்தி | மாற்கு 14: 1- 15: 47 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- குருத்து ஞாயிறு**

ஆகவே, இயேசுவின் பாடுகளின் குருத்து ஞாயிரை சிறப்பிக்கும் நாம் இயேசுவை போன்று மானுட மீட்புக்காக துன்பங்களை துணிவோடு ஏற்போம்.

துன்பங்களை அவமானமாகப் பார்க்காமல், அவையே நம்மையே இறைவனிடம் சேர்க்கும் கருவி என்பதை உணர்வோம். இறைவனின் துணை எப்போதும் நம்மோடு இருக்கின்றது என்பதை உணர்ந்து, இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்வோம், அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.